சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

3-4 பங்குனி 2052
16th - 17th March 2021
ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

# Journal of Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : தமிழ் உயராய்வுத்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி) எளையாம்பாளையம், திருச்செங்கோடு
முதுகலைத் தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (மகளிர்) வீராச்சிபாளையம், சங்ககிரி

# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல்

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**
**முனைவர் ம. கவிதா**
**முனைவர் செ. ஜெயந்தி**

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

19 பகுதி-5
Part -5

மற்றொன்று:

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

ஜனவரி - மார்ச்

ஏப்ரல் - ஜூன்

ஜூலை - செப்டம்பர்

அக்டோபர்- டிசம்பர்

Journal of

# Classical Thamizh

**(A Quarterly International Multi lataral Thamizh Journal)**

January - March

April - June

July - September

October - December

ISSN:2321-0737

# நான்மணிக்கடிகை உணர்த்தும் பெண்ணியச் சிந்தனைகள்

சு. ஹேமலதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, விவேகானந்தா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி (தன்னாட்சி), எளையாம்பாளையம், திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

தமிழகத்தில் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட பதினெட்டு நூல்கள் 'பதிணென் கீழ்க்கணக்கு' நூல்கள் என வழங்கப்படுகின்றன. இவற்றை புறம், அறம், அகம் என மூன்றாக பிரிக்கின்றனர். இதில் அறநூல்களில் ஒன்றாக நான்மணிக்கடிகை அமைந்துள்ளது. இந்நூலில் இடம்பெறும் ஒவ்வொரு பாடல்களிலும் நான்கு விதமான கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதன் ஆசிரியர் விளம்பிநாகனார். இந்நூல் கடவுள் வாழ்த்து உட்பட *106* பாடல்களைக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. இந்நூலில் இடம் பெற்றுள்ள பெண்களுக்கான வரையறுக்கப்பட்ட நெறிகளை காண முற்படுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## பெண்ணின் இயல்பு

பெண் என்பவள் இயற்கையின் ஆற்றல் மிகு படைப்பாக விளங்குகின்றாள். அவளால் தான் குடும்பம் அன்பையும், இனிமையையும் பெற முடியும் என்பதில் ஐயமில்லை. 'மாதர்' என்ற சொல்லிற்கு 'காதல்' என்ற பொருள் உண்டு. இதனையே ரூசோவும் "மாதர் முகமே எனது புத்தகம்" என கூறியுள்ளதையும் காணமுடிகின்றது. பெண்ணைவிட பெருமையுடைய யாதொன்றும் இல்லை எனவே தான் வள்ளுவரும் "பெண்ணின் பெருந்தக்க யாவுள" என போற்றியுள்ளார்.

பெண் என்ற சொல்லுக்கு 'அழகு' என்பது பொருள். அது பெண்ணை உணர்த்தும் மாதர் என்ற சொல்லுக்கும்'அழகு' என்பதுதான் பொருந்தும் என திரு. வி. க அ்வர்கள் தமது பெண்ணின் பெருமை (அ) வாழ்க்கைத்துணை என்ற நூலில் கூறியுள்ளார். நான்மணிக்கடிகையில் பெண்கள் குறித்த பாடல்கள் முப்பத்து நான்கு உள்ளன.

## பெண்களின் இயல்பு நாணம்

பெண்களுக்கு இருக்க வேண்டிய இயல்புகளில் ஒன்று 'நாணம்' ஆகும். தொல்காப்பியர்,

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப"[1]

என்ற நூற்பாவின் வழி அறியமுடிகின்றது.

நான்மணிக்கடிகையில் நாணம் பற்றிய செய்திகள் நான்கு பாடல்களில் அமைந்துள்ளன. 'பெண்ணுக்கு அணி நாணம்' ஆடவர்கள் நன்மங்கையரின் நாணத்தை கண்டு மகிழ்வர். நல்லியல்பு உடைய பெண்டிர் நாணம் உடையவராக இருப்பர். இதனை நான்மணிக்கடிகையில்

'நலத்துக்கு அணியென்ப நாணம்'[2]

'நல்லாரை நல்லவர் நாணுவப்பர்'[3]

'நாணின் வரை நிற்பர் நற்பெண்டிர்'[4]

'................ நல்லார்
நலம் தீது நாணற்று நிற்பின்'[5]

என்ற பாடல்களின் மூலம் அறியமுடிகிறது.

## பெண்ணின் இல்லற நெறிகள்

இல்லறம் என்பது அறத்திற்கு அடிப்படையாக விளங்குவதாகும். இல்வாழ்க்கை என்பது ஆணுக்கு மட்டுமோ அல்லது பெண்ணுக்கு மட்டுமோ உரியது அல்ல. இல்லறம் இரு பாலருக்கும் அறம் வளர்க்கும் களமாகும்.

இல்லறம் என்பதற்கு கிரியாவின் தற்காலத் தமிழ் அகராதி கணவன்-மனைவி சேர்ந்து நடத்தும் வாழ்க்கை குடும்ப வாழ்க்கை, Life of a house holder என்று பொருள் விளக்கம் தருகிறது.

பெண் இல்வாழ்க்கையில் இவ்வாறு இருத்தல் வேண்டும் இவ்வாறு இருத்தல் கூடாது என்ற கருத்துக்களை ஒன்பது பாடல்வரிகளில் (20, 21, 22, 39, 47, 73, 85, 87, 101) எடுத்தியம்பிள்ளார்.

மாட்சிமையுடைய மனைவியால் இல்வாழ்க்கை வளம்பெறும், கணவன் மனம் வருந்தினால் அன்பின் மிகுதியால் அவளும் வருந்த வேண்டும், வருவாய்க்கு ஏற்றவாறு செலவு செய்ய வேண்டும். கணவரோடு ஒருமித்து வாழ வேண்டும் என்ற கருத்துக்களை புலப்படுத்துகிறது. இதனை,

'மனைக்கு ஆக்கம் மாண்ட மகளிர்'[6]

'பெற்றான் சாதிர்ப்பில் பினையன்னாள்
தான் அதிர்க்கும்'[7]

'..................... . தகையுடைய
பெண் இனிது பேணி வழிபடின்'[8]

'..................... தத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு'[9]

ஒன்றுக்கல் பெண்டிர் தொழில்நலம் என்ற பாடலடிகள் மூலம் அறியமுடிகிறது. மேலும் ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் இல்லறநெறியில் மனைவியாக விளங்கும் பெண் தீங்கு செய்யும் பெண்ணாக இருக்கக் கூடாது என்ற கருத்தை இந்நூல் எடுத்துக் கூறுகிறது.

'மனைக்குப் பாழ்வாள் நுதல் இன்னம்'[10]

'இல்லத்துக்குத் தீங்கொழுவாள்
.............. . பாழ் ஒக்கும்
பண்புடையாள் இல்லா மனை'[11]

என்ற பாடலடிகள் இல்லறம் பாழாவதற்கு காரணம் நல்ல மனைவி வாய்க்காமையே என்றும் இல்லறத்தில் இருந்து கொண்டு தீங்கு செய்யும் கணவன் மனைவி இல்லாத வீடு பாழ்மனையை ஒக்கும் என்றும் இல்லறப் பெண்ணன் செயல்களை எடுத்துரைத்துள்ளார்.

இப்பாடலடிகள் மூலம் பெண்கள் இவ்வாறு இருத்தல் கூடாது என்ற செய்தியை அறியமுடிகிறது.

**தாய்மை**

தாய்மை என்பதற்கு அருகுபோல் தழைத்து ஆல்போல் வேரூன்றி, பல்கி வளவாழ்வு வாழ்வதற்கான மூலமாயுள்ள முதல்நிதி என்று சொற்பிறப்பியல் பேரகரகமுதலி விளக்கமளிக்கிறது.

மக்கட்பேறு என்பது பெண்ணுக்கான கடமைகளுள் ஒன்றாகும். குழந்தை செல்வத்தால் பெண்ணின் வாழ்வு சிறப்புப் பெறுகிறது. குழந்தையை பெற்றெடுத்து பெண்ணைப் பற்றிய செய்திகளை பாடல்களில் விளம்பிநாகனார் கூறியுள்ளார். அவை,

'.................... தாய்முலைப்
பால்நோக்கி வாழும் குழவிகள்'[12]

'தாயின் சிறந்த தமரல்லை
.................... தாயென்பாள்'[13]

என்ற பாடல்வரிகளைக் கொண்டு அடித்தாலும் குழந்தை தாயை நாடிச் செல்லும் இயல்புடையது. குழந்தைகள் தாய் பாலால் வளரும். தாயைவிடச் சிறந்த உறவு இல்லை. தாய் முன் செய்த நன்வினையின் பயன், தாயைப் போன்ற தெய்வம் ஒருவருக்கு வேறு எதுவும் இல்லை என்று நான்மணிக்கடிகை கூறுகின்றது.

**பின்விளைவை அறியும் பெண்**

பெண் என்பவள் புத்தி கூர்மையுடன் இருப்பதே சிறந்தது. பின்னால் நடைபெற இருப்பதை முன்கூட்டியே ஆராயும் திறன் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தை

'பிணியன்னார் பின்நோக்காப் பெண்டீர்
உலகிற்கு'[14]

என்ற பாடல்வரிகளில் விளக்குகின்றார்.

**கணவனே கண்கண்ட தெய்வம்**

கணவனை தெய்வமாக வணங்கும் பெண்ணைப் பற்றி வள்ளுவர்,

'தெய்வம் தொழாஅள் கொழு நன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை'[15]

என்ற குறளில் விளக்குவதனை அறியமுடிகின்றது.

நான்மணிக்கடிகையும் இதனை,

'.................. அஃது அன்றி
அணங்கல் வணங்கின்று பெண்'[16]

என்ற வரிகளில் பெண் என்பவள், பிற தெய்வங்களை வணங்காது தன் கணவனையே தெய்வமாக வணங்கியதனை அறியமுடிகிறது.

பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு. அவர்களைக் கட்டாயப்படுத்துவது தவறான செயல் ஆகும். இதனை,

'.................. . பேதை
விடுமன்றோ வீங்கிப் பிணிப்பின்'[17]

என்ற வரிகளில் கூறுகின்றார்.

கற்பு

கற்பு என்பதற்கு கற்பு, காமம், நல்லொழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல் ஆகிய பண்புகளை மகளிர்க்குரிய மாண்புகளாகத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். இவற்றுள் முதன்மையான இடம்பெறுவது கற்பென்னும் பண்பே. மேலும் மகளிர்க்கு உயிரினும் சிறந்ததாக நாணத்தையும், நாணத்தின் சிறந்ததாக கற்பையும் தொல்காப்பியர் வலியுறுத்துவதனை காணமுடிகிறது. அதேபோல் விளம்பிநாகனாரும் கற்பு குறித்த செய்திகளை இரண்டு இடங்களில் கூறியுள்ளார்.

'............ . நிறை நின்ற
பெண் நன்று பீடிலா மாந்தரின்
பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள்'[18]

என்ற பாடலடிகளில் கற்பு என்பது இல்லறத்தாருக்குரிய கட்டுப்பாடு ஆகும். இந்த கட்டுப்பாடே கற்பெனும் அறமாகும் என்றும், கற்பின் மிக்க பெண் மேன்மையுடையவள் என்றும் கற்புடைய பெண்ணே நல்ல மனைவியாக இருந்து ஒழுக்க நெறியில் தவறாதவளாக இருப்பவள் என்றும் புலப்படுத்தியுள்ளன.

தீய பெண்டீர்

பெண்ணின் சிறப்புகள் பண்புகள் போன்றவற்றை குறிப்பிட்டுள்ள இந்நூல் தவறான நெறியில் ஒழுகும் பெண்டீரை தீய பெண்டீர் என்று குறிப்பிடுவதை அறிய முடிகிறது.

'.................. . அல்லாரை
அல்லார் உவப்பது கேடு'[19]

என்ற வரிகள் மூலம் தீய குணங்களை கொண்டுள்ள பெண்டீரை தீய குணமுடைய ஆண்கள் விரும்புவர் என்பதனை தெளிவுப்படுத்துகின்றார்.

முடிவுரை

நான்மணிக்கடிகையில் கற்பு, நாணம் போன்ற குணங்களே பெண்களுக்கு சிறப்பு சேர்ப்பவை என்ற கருத்து காணப்பட்டிருப்பதனை அறிய முடிகிறது. மேலும் தாய்மையின் சிறப்புப் பற்றியும், இல்லறப் பெண்களின் குணநலன்கள் பற்றியும், தீயப் பெண்டீரின் இயல்பு பற்றியும் அறியமுடிகின்றது. பெண்கள் கணவனையே தெய்வமாகவும், துணையாகவும் கொண்டனர் என்ற செய்தியும் தெரியவருகின்றது.

துணை நூற்பட்டியல்

1. இளம்பூரணார்(உ. ஆ), தொல்காப்பியம், நூற்பா. 1045
2. இராமசுப்ரமணியன், நான்மணிக்கடிகை, பா. 11:3
3. மேலது, பா. 56:3
4. மேலது, பா. 90:2
5. மேலது, பா. 95:2
6. மேலது, பா. 20:1
7. மேலது, பா. 21:1

8. மேலது. பா. 47:3-4
9. மேலது. பா. 73:3-4
10. மேலது. பா. 22:1
11. மேலது. பா. 101:3-4
12. மேலது. 20:1-2
13. மேலது. பா45:3-4
14. மேலது. பா. 34:1
15. பரிமேலழகர்(உ. ஆ). திருக்குறள். பா. 55
16. இராமசுப்ரமணியன். நான்மணிக்கடிகை. பா. 91:3-4
17. மேலது. பா. 81:1-2
18. மேலது. பா. 15:1-2
19. மேலது. பா. 56:3-4

ஜ